1970 நவம்பர் 30]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மரத்திலே ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லை. ஆறு, ஏரி, கால்வாய்க் கரைகளில் வண்டல் படிந்திருக்கிற காரணத்தால் தேக்கு வைக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அதனுல்தான் அப்படிச் செய்கிறோம்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, ஏரி, ஆறு, கால்வாய்க் கரைகளிலே பனை மரங்கள் வைத்தால் ஏரியல் ஸ்ப்ரே செய்வதற்கு முடியவில்லை என்று விவசாயிகள் சொல்கிருர்கள். எனவே கால்வாய், ஏரிகள் இவற்றின் கரைகளில் உள்ள பனை மரங்களை வெட்டியெறிய அரசு உத்திரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏரிக்கரைகளிலே மரங்கள் வைப்பதற்கு முக்கியமான காரணம் அவை தண்ணீர் அரிப்பைக் தடுப்பதற்காகத்தான். அவற்றை வெட்டியெறியத் திட்டம் இல்லை. ஏரிக்கரைகளுக்குள்ளே வைப்பதால் தூர் எடுப்பதற்கு முடியவில்லை என்று சொல்கிருர்கள். அதனுல்தான் இப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டுவரப் பரிசிலனை செய்கிறோம்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்த ஏரி, ஆற்றுக் கால்வாய்ப் படுகைகளில் இந்த மரங்களை வளர்க்கும்பொழுது, விவசாயிகளுக்குப் பயன்தரும் தழைச்சத்துக்களைத்தரும் மரங்களைப் பயிரிடும் முறைகளைப் பரிசீலிக்குமா ? வடாற்காடு மாவட்ட அபிவிருத்திக்குழு பரிந்துரை செய்து, தழைச்சத்துக்களைத் தரும் மரங்களைச் சாகுபடி செய்ய வேண்டுமென்ற கருத்து தெரிவித்திருக்கிருர்கள். அதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்பொழுது அதற்கான திட்டமில்லை.

மேலத்தானியத்தில் மின் கழக துணை அலுவலகம்

*80 வினு—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள மேலத்தானியத்தில் மின் கழகத் துணை அலுவலகம் (Sub-Station) ஒன்றை அமைத்துத் தரும் உத்தேசம் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, பொன்னமராவதி, புதுக்கோட்டை பகுதிகளில் மின்துறைக் கழகத் துணை அலுவலகங்கள் மிகுந்த தொலைவிலிருப்பதால், உரிய வகையில் விரைவாக காரியங்களைச் செய்ய முடியாம

லிருப்பதால், மேலத்தானியத்தைச் சுற்றியிருக்கும் பகுதிகளுக்குப் பயன் ஏற்படும் வகையில் மேலத்தானியத்தில் மின்சாரத் துணை நிலையத்தை அமைப்பது பற்றி இனிமேலாவது அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தற்பொழுது மேலத் தானியத்திற்கு அருகாமையில் விராலிமலை, துவரங்குறிச்சி, திருமயம் போன்ற இடங்களில் மின்சாரத் துணை அலுவலகம் இருப்பதால் இப்பொழுது அந்த உத்தேசமில்லை. மேற்கொண்ட காலத்தில் லோடு அதிகமாகத் தேவைப்பட்டால் தனியாக ஒரு நிர்வாகம் அமைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அவையுரிமைக் கேள்வி

கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமங்கலம் நில வள வங்கி பற்றி திரித்துக் கருத்து தெரிவித்ததாகக் கூறப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சித்தன் அவர்கள், கடந்த 27-11-1970 ஆம் நாளன்று தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதாவைப் பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டபோது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், திருமங்கலம் நிலவள வங்கி பற்றிக் கூறிய கருத்து மாறுபட்ட கருத்து, வேண்டுமென்றே திரித்துக் கூறப் பட்டது என்ற உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள், இதை நான் இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

பெருமழையால் கூவம் சீரமைப்புத் திட்டத்திற்கு ஏற்பட்ட சேதத் தால் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள், அண்மையில் பெய்த மழையால் கூவம் அபிவிருத்தி திட்டத்தால் செய்த வேலைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டு, லட்சக்கணக்கான ரூபாய்கள் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளபடியால் இத் திட்டம் செயல்முறைபற்றி விவாதிக்க ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி இந்த அவையை ஒற்றி வைத்து விவாதிக்கத் தக்க அளவிற்கு முக்கியத்துவம் உள்ள விஷயம் என்பதைப்பற்றிச் சுருக்கமாக எடுத்து கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.